## சிறப்புக்குறிப்பு 6
## இலங்கை பற்றிய பரஸ்பர மதிப்பீடு 2025: அதன் தேசிய முக்கியத்துவம்

2

### 1. அறிமுகம்

பணம் தூயதாக்குதலும் பயங்கரவாதி நிதியிடலும் உலகின் நிதியியல் முறைமைகளுக்கும் அதேபோன்று தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றுக்கும் குறிப்பிடத்தக்க சவால்களைத் தோற்றுவிக்கின்றன. பணம் தூயதாக்குதலும் பயங்கரவாதி நிதியிடலும் நாடுகளின் பொருளாதாரங்களையும் சமூகங்களையும் நலிவடையச் செய்வதன் மூலம் உலகம் முழுவதுமுள்ள நாடுகளைப் பாதிக்கின்றன. பலவீனமான ஆளுகை மற்றும் ஊழல் காரணமாக சில நாடுகள் உயர்வான இடர்நேர்வில் காணப்படுகின்ற அதேவேளை, பணம் தூயதாக்குதலுடனும் பயங்கரவாதி நிதியிடலுடனும் இணையப்பெற்ற இடர்நேர்வுகளிலிருந்து ஒட்டுமொத்தமாக விடுபட்ட நாடு எதுவும் இல்லை. உலகம் முழுவதும் நிதியியல் குற்றங்கள் அதிகரித்தளவில் பரவியிருப்பதைக் கருத்திற்கொள்கையில், பணம் தூயதாக்குதலுக்கும் பயங்கரவாதி நிதியிடலுக்கும் எதிராகப் போராடுவது உலகளாவிய ரீதியிலான முன்னுரிமை ஒன்றாக தோற்றம்பெற்றுள்ளது. நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதற்கும் இக்குற்றங்களின் இடர்நேர்வுகளை முறியடிப்பதற்கும் அரசாங்கங்கள் மற்றும் சட்ட அமுலாக்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள், மற்றும் பன்னாட்டு அமைப்புக்கள் என்பவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பினை இது வேண்டிநிற்கின்றது.

பணம் தூயதாக்குதலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான உலகளாவிய கொள்கை வகுக்கும் நிறுவனமான நிதியியல் நடவடிக்கைச் செயலணியானது உலகளாவிய தரநியமங்களைத் தாபித்தல் மற்றும் தேசங்கள் மத்தியில் ஒத்துழைப்பினை ஊக்குவித்தல் என்பன மூலம் பணம் தூயதாக்குதலையும் பயங்கரவாதி நிதியிடலையும் முறியடிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.

நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் தரநியமங்கள் உடனான நாடுகளின் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தலையும் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த நடைமுறைப்படுத்தலையும் மதிப்பிடுவதற்கு செயலூக்கமிக்க படிமுறையொன்றாக, நிதியியல் நடவடிக்கைச் செயலணியும் நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பாணியிலான பிராந்திய நிறுவனங்களும் பரஸ்பர மதிப்பீடுகளை நடாத்துகின்றன. தேசிய முறைமைகளில் பலவீனங்களை அது இனங்காணுதல் மற்றும் அந்நாடுகளின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினுள் மேம்படுத்தலுக்கான துறைகளை இனங்காணுதல் என்ற காரணத்தினால் இம்மதிப்பீட்டுச் செயல்முறையானது உறுப்பு நாடுகளுக்கு குறிப்பிடத்தக்க தேசிய முக்கியத்துவத்தினை கொண்டதாக விளங்குகின்றது. அதேவேளை உலகளவில் நாடுகள் மத்தியில் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை இது ஊக்குவிப்பதன் மூலம் ஒத்திசைவான அடிப்படையில் பணம் தூயதாக்குதலும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவற்றை ஊக்குவிக்கின்றது.

இலங்கை 2025இல் அதன் மூன்றாவது பரஸ்பர மதிப்பீட்டை சந்திக்கின்றது. நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் “சாம்பல் நிறப் பட்டியலிடல்” இலங்கை உள்ளடக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த இரு பரஸ்பர மதிப்பீடுகளுக்கு நாடு உட்பட்ட அதன் முன்கூட்டிய அனுபவம் மற்றும் அதனைத்தொடர்ந்துவந்த பொருளாதாரம் மற்றும் நிதியியல் மந்தநிலை என்பவற்றைக் கவனத்திற்கொள்கையில், வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீடானது நாட்டின் பொருளாதாரத்திலும் நிதியியல் முன்னேற்றத்திலும் முக்கிய நிகழ்வாக அமைந்திருக்கும்.

### 2. பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறை

பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையானது சமதகைமைபெற்றோர் மீளாய்வொன்றைப் போன்றே மேற்கொள்ளப்படும் நாட்டின் பணம் தூயதாக்குதலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் முறைமை பற்றிய விரிவான பகுப்பாய்வினை ஈடுபடுத்துகின்றது. பரஸ்பர மதிப்பீடுகளானது 14-18 மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக நடாத்தப்படுவதுடன் அவை இரு முக்கிய கூறுகளைக் கொண்டவையாகும்: தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீடு மற்றும் செயல்திறன் வாய்ந்ததன்மை பற்றிய மதிப்பீடு.

- **தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல்:** *சட்டங்கள் மற்றும் அமுலாக்கத்தக்க வழிமுறைகளின் கட்டமைப்பு உள்ளடங்கலாக நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகள் மற்றும் தகைமையுடைய அதிகாரிகளின் இருப்பு, தத்துவங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் குறிப்பான தேவைப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.*
- **செயல்திறன் வாய்ந்ததன்மை பற்றிய மதிப்பீடு:** *செயல்திறன் வாய்ந்ததன்மையென்பது பணம் தூயதாக்குதல் மற்றும் பயங்கரவாத அத்துடன் ஆயுதபெருக்கத்திற்கு நிதியிடல் இடர்நேர்வுகளையும் அச்சுறுத்தல்களையும் நிதியியல் முறைமைகளும் பொருளாதாரங்களும் தணிக்கின்ற அளவாகும். (அ) கொள்கை, சட்டம் அல்லது அமுலாக்கத்தக்க வழிகள் (ஆ) சட்ட அமுலாக்கம், மேற்பார்வை அல்லது உளவறிதல் செயற்பாடு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் அல்லது (இ) குறிப்பான வழிமுறைத்*

*தொகுதியொன்றினை நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் உத்தேசிக்கப்பட்ட பெறுபேற்றுடன் இது தொடர்புடையதாகவிருக்கலாம்.*

தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மற்றும் செயல்திறன் வாய்ந்ததன்மை பற்றி மதிப்பிடப்படுகின்ற பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறை முழுவதுமான படிமுறைகள் பின்வருமாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

i. **தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தலை மதிப்பிடுதல் (4 மாதங்கள்):** நாடு அதன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.

ii. **நோக்கிடல்:** செயல்திறன்வாய்ந்த மதிப்பீட்டுக்காகவும் தளத்திற்கான விஜயத்திற்காகவும் தயாராகின்றபோது மதிப்பீட்டாளர்கள் தளவிஜயம் பற்றி கவனத்திற்கொள்ளும் துறைகளை நிர்ணயிப்பதற்கு பூர்வாங்க நோக்கிடல் செயற்பாட்டினை மேற்கொள்கின்றனர்.

iii. **தள விஜயம் (2 வாரங்கள்):** தள விஜயத்திற்காக நாட்டிற்கு மதிப்பீட்டாளர்கள் பயணித்தல்.

iv. **அறிக்கை வரைதல்:** தள விஜயத்தினைத் தொடர்ந்து உடனடியாக செயல்திறன் வாய்ந்ததன்மை மற்றும் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீடு பற்றி கண்டறிந்தவைகளுடன் பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கையினை மதிப்பீட்டாளர்கள் இறுதிப்படுத்தல்.

v. **முழுநிறைவான கலந்தாராய்தல் (தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மதிப்பீட்டின் பின்னர் 15 மாதங்கள்):** ஒவ்வொரு ஆண்டும் நிதியியல் நடவடிக்கைச் செயலணி நடாத்துகின்ற மூன்று கூட்டங்களில் ஒன்றில் மதிப்பீட்டாளர்கள் வரைவு அறிக்கையினை அதன் முழுநிறைவுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல்.

vi. **இறுதித் தர மீளாய்வு (அனுமதியின் பின்னர் 2 மாதங்கள்):** முழுநிறைவுக்கூட்ட அனுமதியினைத் தொடர்ந்து வலைத்தளத்தில் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் தொழில்நுட்ப ரீதியான தரம் பற்றியும் ஒத்திசைவிற்கும் அறிக்கையினை மீளாய்வுசெய்தல்.

vii. **பின்தொடர்வு:** ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், அறிக்கையில் இனங்காணப்பட்ட குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு நாடுகள் வேண்டப்படுகின்றன. அடுத்த பரஸ்பர மீளாய்வு வரையிலும் இது ஆண்டுதோறும் பின்தொடரப்படும்.

### 3. பரஸ்பர மதிப்பீடுகளின் தேசிய முக்கியத்துவம்

பாதுகாப்பானதும் ஆற்றல்வாய்ந்ததுமான நிதியியல் முறைமையினை வினைத்திறனுடனும் செயல்திறன்மிக்கதாகவும் உறுதிசெய்கின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையானது நாடுகளைத் தேவைப்படுத்துகின்றது. அதற்கமைய, பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையில் சாதகமான பெறுபேறொன்றைப் பெற்றுக்கொள்ளலானது உலகளாவிய நிதியியல் முறைமையில் நாட்டின் நிலைமையினைப் பாதுகாத்து, அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை துரிதப்படுத்துவதன் வாயிலாக நிதியியல் முறைமையினைப் பாதுகாப்பதை உறுதிசெய்கின்றது.

பரஸ்பர மதிப்பீடுகளின் தேசிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்ற காரணிகள் சில பின்வருமாறு:

i. **நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிக்காத்தல்:** நிதியியல் முறைமையின் ஒருமைப்பாட்டையும் உறுதிப்பாட்டையும் பேணிக்காப்பதில் செயல்திறன்வாய்ந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகள் முக்கிய பங்காற்றுகின்றன. நிதியியல் நடவடிக்கைச் செயலணிப் பரிந்துரைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் பன்னாட்டு வங்கித்தொழில் சேவைகளுக்கும் மூலதன சந்தைகளுக்குமான அவற்றின் பெறுவழியினை மோசமாகப் பாதிக்கக்கூடிய உயர் இடர்நேர்வுமிக்க நியாயாதிக்கமொன்றாகவிருக்கும் இடர்நேர்வினை நாடுகள் தணிக்கின்றன.

ii. **தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல்:** ஆற்றல்வாய்ந்த பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பானது தேசிய பாதுகாப்பிற்கு அத்தியாவசியமாக விளங்கி, பயங்கரவாதத்திற்கு நிதியிடலுக்கும் வேறு குற்றவியல் செயற்பாடுகளுக்கும் சட்டத்திற்குப் புறம்பான நிதியங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கின்றது. பரஸ்பர மதிப்பீடுகளுக்குட்பட்டு இனங்காணப்பட்ட பலவீனங்களைச் சீர்செய்வதன் மூலம் சட்டத்திற்குப் புறம்பான நிதியியல் பாய்ச்சலைத் தடுத்து, இதன்மூலம் தேசிய பாதுகாப்பு நலன்களை பாதுகாத்துக்கொள்வதற்கான அவற்றின் இயலளவை நாடுகள் வலுப்படுத்துகின்றன.

iii. **பன்னாட்டு தரநியமங்களுடனான இணங்குவித்தல்:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பன்னாட்டு தரநியமங்களைக் கடைப்பிடிப்பதற்கான அவற்றின் கடமைப்பொறுப்பினை எடுத்துக்காட்டுவதற்கு பரஸ்பர மதிப்பீடுகளில் பங்கேற்பது நாடுகளுக்கு மிக முக்கியமானதாகும். இத்தரநியமங்களை பேணுகின்றமை உலகளாவிய நிதியியல் சமூகத்தில் நாட்டின் கீர்த்தியினை மேம்படுத்துகின்ற அதேவேளை சர்வதேச பங்காளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கையினை ஊக்குவிக்கின்றது.

iv. **பன்னாட்டு ஒத்துழைப்பினை வசதிப்படுத்தல்:** வெற்றிகரமான பரஸ்பர மதிப்பீடுகள், நிதியியல் குற்றங்களை முறியடிப்பதில் மிகுந்த பன்னாட்டு ஒத்துழைப்பினையும் நாடுகளுக்கிடையில் தகவல்களைப் பகிர்வதையும் ஊக்குவிக்கின்றது. நிதியியல் நடவடிக்கைச் செயலணி தரநியமங்களுடனான மேம்பட்ட இணங்குவித்தல் உலகளாவிய நிதியியல் முறைமையினுள் நாட்டின் நிலையினை மேம்படுத்தி விசாரணைகள் மற்றும் அமுலாக்க நடவடிக்கைகளில்

2

வேறு நியாயாதிக்கங்களுடன் வினைத்திறன் மிக்க ஒத்துழைப்பினை வசதிப்படுத்துகின்றது. உலகளவில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை முறியடிப்பதற்கான கூட்டான முயற்சிகளை இவ்வொத்துழைப்பு வலுப்படுத்தி, நிதியியல் குற்றங்களை தடுப்பதிலும் நிறுத்துவதிலும் மிகவும் செயல்திறன்வாய்ந்த பெறுபேறுகளுக்கு வழிவகுக்கின்றது.

v. **பலவீனங்களை அடையாளம் காணல்:** நாடுகள் அவற்றின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்புக்களில் பலவீனங்களையும் இடைவெளிகளையும் இனங்காண்பதற்கு பரஸ்பர மதிப்பீடுகள் இயலச்செய்கின்றன. குற்றவாளிகளினால் சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாதவையாக விளங்குகின்ற அமுலாக்கலில் சட்ட ரீதியான இடைவெளிகள் அல்லது குறைபாடுகள் போன்ற பாதிக்கப்படும் தன்மைகள் பற்றி நாடுகளுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றது.

**4. பரஸ்பர மதிப்பீடுகளை எதிர்கொள்வதில் இலங்கையின் கடந்தகால அனுபவம்**

பணம் தூயதாக்கல் மீதான ஆசிய பசுபிக் குழுமம், இந்தோ பசுபிக்கிற்கான நிதியியல் நடவடிக்கைச் செயலணி பாணியிலான பிராந்திய நிறுவனங்கள் மூலம் இரு பரஸ்பர மதிப்பீடுகளுக்கு இலங்கை உட்பட்டிருந்தது. இரு பரஸ்பர மதிப்பீடுகளும் 2006 மற்றும் 2014/15 ஆண்டுகளில் இடம்பெற்றன. இவ்விரு மதிப்பீடுகளும் பொதுவாக “சாம்பல் நிறப்பட்டியலிடல்” எனக் குறிப்பிடப்படுகின்ற அதன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பில் உபாய ரீதியான குறைபாடுகளுடன்கூடிய ஆட்சிப்பிரதேசமாக நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலம் இலங்கை பட்டியலிடப்படுவதற்கு வழிவகுத்தது. சாம்பல் நிறப்பட்டியலிடலானது இரு சந்தர்ப்பங்களிலும் மோசமான பொருளாதார மற்றும் நிதியியல் விளைவுகளை ஏற்படுத்தியது.

2015இற்குப் பின்னர் நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலம் இலங்கையின் “சாம்பல் நிறப்பட்டியலிடல்” இனைத் தொடர்ந்து 2018 பெப்புருவரியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் உபாய ரீதியான குறைபாடுகளுடன்கூடிய உயர் இடர்நேர்வுமிக்க மூன்றாம் நாடொன்றாக ஐரோப்பிய ஆணைக்குழுவும் இலங்கையைப் பட்டியலிட்டது. இது, இலங்கையின் நேரொத்த வங்கித்தொழில் உறவுகளைப் பாதித்தது.

2015இற்குப் பின்னர் அதன் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் முறைமையினை மேம்படுத்துவதற்கு இலங்கை குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்தமையினால் இலங்கை 2019 ஒத்தோபரிலும் 2020 மேயிலும் முறையே நிதியியல் நடவடிக்கைச் செயலணி மூலமும் ஐரோப்பிய ஆணைக்குழுவினாலும் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது.

**5. வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டிற்கான இலங்கையின் தயார்நிலை**

கடந்தகால மதிப்பீடுகளின் மோசமான தாக்கங்களைக் கருத்திற்கொள்கையில் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துமாறு பரஸ்பர மதிப்பீடு இலங்கையை தேவைப்படுத்தும். அரசாங்கம் மற்றும் சட்ட அமுலாக்க முகவராண்மைகள், நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்கள் உள்ளடங்கலாக பங்குதாரர்களிடமிருந்தான இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படும் கூட்டான நடவடிக்கையொன்றினை இது வேண்டுகின்றது.

இதன் பின்னணியில், நாட்டின் தயார்நிலை நிதியியல் குற்றங்களை முறியடிப்பதற்கான அதன் அர்ப்பணிப்பினை எடுத்துக்காட்டுவது இன்றியமையாததாகும். இம்மதிப்பீடானது இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்புகள் பற்றிய முழுமையான மதிப்பீடொன்றினை வழங்கி வலிமைகள், பலவீனங்கள் மற்றும் மேம்படுத்தலுக்கான துறைகள் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றது. அதற்கமைய, பரஸ்பர மதிப்பீட்டிற்கான தயார்படுத்துகையில் இதுவரையில் இலங்கையில் நிதியியல் உளவறிதல் பிரிவினால் பல முன்முயற்சிகளில் எடுக்கப்பட்டுவருகின்றன.

i. **பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் செயலணியொன்றைத் தாபித்தல்:** இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் தீர்ப்பதற்கும் தொடர்புடைய பங்குதாரர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பிற்கும் பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் பற்றிய முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்வதற்கும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரொருவரின் தலைமைத்துவத்தின் கீழ் ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்குகின்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான செயலணி அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டது.

ii. **தேசிய ஒருங்கிணைப்புக் குழுவுடனான ஒருங்கிணைப்பு:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் பங்குதாரர்களுக்கிடையில் தேசிய மட்ட ஒருங்கிணைப்பினைப் பேணுகின்ற ஆலோசனைக் குழுவாகும். தேசிய ஒருங்கிணைப்புக் குழு மற்றும்

பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் செயலணி என்பவற்றின் தலைமைத்துவத்துடன் வரவிருக்கும் பரஸ்பர மதிப்பீட்டுடன் தொடர்புடைய அனைத்துப் பணிகளும் ஒருங்கிணைக்கப்பட்டுவருகின்றன.

iii. **2021/22இல் தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நடாத்துதல்:** நிதியியல் நடவடிக்கைச் செயலணியின் பரிந்துரைகளுக்கிசைவாக நாடு எதிர்கொள்கின்ற பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகளை இனங்கண்டு, மதிப்பிட்டை புரிந்துகொள்வதற்கு 2021/22இல் இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நிறைவுசெய்வதை நிதியியல் உளவறிதல் பிரிவு ஒருங்கிணைத்தது. அதற்கமைய, நாட்டின் ஒட்டுமொத்த பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியிடல் இடர்நேர்வு "நடுத்தரமானது" ஆக மதிப்பிடப்பட்டது. இது, நடுத்தர அச்சுறுத்தல் மட்டத்தினதும் நடுத்தர பாதிக்கப்படும் தன்மை மட்டத்தினதும் ஒருங்கிணைப்பாகும்.

iv. **பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய கொள்கை 2023 - 2028 இனை உருவாக்குதல்:** தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகளின் அடிப்படையில் நாட்டில் பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தலை செயல்திறன்வாய்ந்த விதத்தில் முறியடிப்பதற்கு இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் தீர்ப்பதற்காக அமைச்சரவையினால் அனுமதியளிக்கப்பட்ட 2023 - 2028 இற்கான தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கொள்கை தயாரிக்கப்பட்டது.

v. **பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்களை உருவாக்குதல்:** அடுத்துவருகின்ற பரஸ்பர மீளாய்விற்காக முக்கிய பங்குதாரர்களை தயார்படுத்தும் நோக்குடன் தொடர்புடைய 24 பங்குதாரர் நிறுவனங்களுக்கான பங்குதாரர் அடிப்படையிலான நடவடிக்கைத் திட்டங்கள் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பின் செயல்திறன்வாய்ந்த தன்மை மற்றும் தொழில்நுட்ப ரீதியான இணங்குவித்தல் மட்டம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டது. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தலுக்கான செயலணிக்கும் அவர்கள் மூலம் வழங்கப்படும் கிரமமான இற்றைப்படுத்தல்களுடன் நடவடிக்கைத் திட்டங்கள் பங்குதாரர் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.

vi. **சட்டவாக்கத் திருத்தங்களை மேற்கொள்ளல்:** பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் மீதான சட்டக் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டும் பன்னாட்டு தரநியமங்களை கடைப்பிடிப்பதனை உறுதிசெய்வதற்கும் முக்கிய சட்டவாக்கங்களைத் திருத்தும் செயன்முறையினை நிதியியல் உளவறிதல் பிரிவு தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடும் சட்டம்; 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்குதலைத் தடுத்தல் சட்டம்; 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாதி நிதியிடலை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கான திருத்தங்களை மேற்கொள்வதிலும் நிதியியல் உளவறிதல் பிரிவு உதவுகின்றது. இத்திருத்தங்கள் 2024இன் மூன்றாம் காலாண்டளவில் நிறைவுசெய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

2

### 6. முடிவுரை

பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தரநியமங்களுடனான இணங்குவித்தலை மதிப்பிடுதல், தேசிய கட்டமைப்புக்களில் பலவீனங்களை அடையாளங்காணல், தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல், பன்னாட்டு ஒத்துழைப்பினை வசதிப்படுத்தல் அத்துடன் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணிக் காத்தல் என்பவற்றில் அவை முக்கிய பங்காற்றுவதனால் நிதியியல் நடவடிக்கைச் செயலணி பரஸ்பர மதிப்பீடுகள் உறுப்பு நாடுகளுக்கு தேசிய முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வுகளாகக் காணப்படுகின்றன. பரஸ்பர மதிப்பீட்டுச் செயன்முறையில் முனைப்புடன் பங்கேற்பதன் மூலம் நாடுகள் நிதியியல் குற்றங்களுக்கெதிரான வழிமுறைகளை வலுப்படுத்தி, பாதுகாப்பானதும் ஆபத்தற்ற நிதியியல் சூழலொன்றுக்குப் பங்களிக்கமுடியும். அதற்கமைய, இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பு வினைத்திறன்மிக்கதாகவும் செயல்திறன்மிக்க விதத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டு எதிர்வரும் பரஸ்பர மதிப்பீட்டில் சிறந்த இணங்குவித்தலை எய்துவதற்கும் உலகளாவிய நிதியியல் சமூகத்தினுள் இலங்கையின் நிலையினை வலுப்படுத்தும் என்பதை அனைத்து முக்கிய பங்குதாரர்களின் கூட்டாண பொறுப்பே உறுதிசெய்யும்.


**உசாத்துணைகள்**

1. FATF (2012-2023), International Standards on Combating Money Laundering and the Financing of Terrorism & Proliferation, FATF, Paris, France, www.fatf-gafi.org/en/publications/Fatfrecommendations/Fatf-recommendations.html
2. FATF (2013-2023), Methodology for Assessing Compliance with the FATF Recommendations and the Effectiveness of AML/CFT Systems, updated June 2023, FATF, Paris, France, http://www.fatf-gafi.org/publications/mutualevaluations/documents/fatf-methodology. html
3. FATF (2021). What are FATF mutual evaluations?, https://www.fatf-gafi.org/content/dam/fatf-gafi/methodology/Handout-5th-Round-Methodology.pdf
4. Basel Institute on Governance (2023), Basel AML Index 2023: 12th Public Edition Ranking money laundering and terrorist financing risks around the world.